## IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.77/2019 | Village | : | |
| Prosecution witness | : | PW-14 | Taluk | : | |
| Name | : | திரு. விஜயகுமார் | Occupation | : | |
| Father Name | : | திரு.ராஜீ | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 09.10.2025**

A4, 9 accused absent. U/sec.355 BNSS petition filed and allowed. Others present.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தற்போது பாலோபநந்தவனம், கருந்தட்டான்குடியில் குடியிருக்கிறேன். நான் இதற்கு முன்பு மாரியம்மன்கோவில் ரோடு பைபாஸ் ரோட்டில் குடியிருந்தேன். நான் ஆதிமாரியம்மன்கோவில் அருகே உள்ள ஒயின்ஷாப் பாரில் மாஸ்டராக வேலை பார்த்தேன். தற்போது அங்கு வேலை பார்க்கவில்லை. போலிஸார் என்னை விசாரிக்கவில்லை. 18.1.2018 அன்று இரவு 10 மணியளவில் கடையை மூடிவிட்டு நானும், கடை ஒனரும் பார் சூப்பர் வைசரும் புதிதாக வந்தவரும் பேசி கொண்டிருந்தோம் சத்தம் கேட்டது ஒடி போய் பார்த்தோம் ஒரு ஆள் வெட்டி கொலைசெய்யபட்டு கிடந்தார். சூப்பர் வைசர் தாலுக்கா காவல்நிலையத்திற்கு போன் செய்தார். 10 நிமிடத்தில் போலிஸார் வந்துவிட்டார்கள்.

அரசுதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்குவிசாரணைக்கு அனுமதி கோரியதன் பேரில் அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

கடந்த 18.1.2018 அன்று நடந்த சம்பவமான ஆட்டோ ராமன் என்கிற லட்சுமணன், சுரேஷ், முத்தமிழ் செல்வன், பாலா என்கிற பாலமுருகன் மற்றும் 5நபர்கள் கையில் அரிவாள், இரும்பு பைப்புடன் ஒயின்ஷாப்பிற்கு வந்து கலிவரதன் என்பவர் இறந்துபோன அப்புவை பார்த்து உன்னால்தாண்டா பிரச்சனை என்று சொல்லி அவரை தலையில் வெட்டினார் என்றும் மற்றவர்கள் தொடர்ந்துவெட்டினார்கள் என்றும் போலிஸாருடன் வாக்குமூலம்

கொடுத்துவிட்டு தற்போது எதிரிகளை பயந்துகொண்டு காப்பாற்றுவதற்காக போலிஸார் விசாரிக்கவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் இல்லை.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப .நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.